# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102060

1. District : மாவட்டம் Sivagangai PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 04/2020 Date: நாள் 05.11.2020

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102

   (iii) Act சட்டம்: Prevention of Corruption Act (Amendment) 2018 Sections பிரிவுகள்: 7

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 04.11.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1800 hrs Time to : நேரம் வரை 2230 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.11.2020 Time : நேரம் 0500 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.11.2020 Time : நேரம் 0530 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Sub-Registrar office, Devakottai, Sivagangai District.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 52 Km, North East

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. C. Balaguru (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Deputy Inspection cell officer (g) Address : முகவரி Sivagangai District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. Tr. K. Muthupandi, Assistant, i/c Sub Registrar 2. Tr. S.R. Himalesh Babu, Assistant, 3. Tr. A. Ramkumar Junior Assistant 4. Tr. S. Palanisamy, office assistant, o/o SubRegistrar office, Devakottai Sivagangai district

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – No delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 05.11.2020ம் தேதி 05.00 மணிக்கு நான் அலுவலத்தில் இருந்தபோது சிவகங்கை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திரு.செ.பாலகுரு அவர்கள் அலுவலகத்தில் ஆஜராகி 04.11.2020ம் தேதி சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய இணை திடீர் சோதனை சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள், 04.11.2020ம் தேதி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.83,100/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2020 u/s 102 Cr.P.C and 7 of Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். வாதி புகார் பின்வருமாறு. அனுப்புநர் : செ.பாலகுரு, துணை ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம், பெறுநர் : காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை, நாள். 05.11.2020, ஐயா, பொருள் : இணை திடீர் சோதனை – சிவகங்கை மாவட்டம் – தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 04.11.2020

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. Kumaravel Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
05.11.2020 [signature] 5/11/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 5.11.2020
DSP/ VACC/SVG

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

சிவகங்கை ஊ.த.க. பிரிவு கு.எண்.4/2020ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

கடந்த 04.11.2020ம் தேதி சிவகங்கை மாவட்டம், துணை ஆய்வுக்குழு அலுவலரான என்னை அழைத்தன் பேரில், நான் பிற்பகல் 3 மணியளவில் தங்கள் அலுவலகம் வந்து தங்களை சந்தித்தேன். சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு, திருமண பதிவு, வில்லங்க சான்று, பிறப்பு/இறப்பு சான்று வழங்குதல் மற்றும் ஆவண நகல் வழங்குதல் உள்ளிட்ட பணிகளுக்கு ஆவண எழுத்தர்கள், இடைத்தரகர்கள் மற்றும் மனுதாரர்களிடமிருந்து லஞ்சமாக பணம் கேட்டு வாங்குவதாகவும், அப்படி வாங்கும் பணத்தை உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் திரு.முத்துப்பாண்டி அவர்கள் அவர் அலுவலகத்திலிருந்து வழக்கமாக வந்து செல்லும் காரில் வைத்திருந்து எடுத்துச்செல்வதாகவும் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகர், ராம்நகர், திருப்பத்தூர் ரோட்டில் அமைந்துள்ள தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தில் 04.11.2020ம் தேதி மாலை 6 மணி முதல் இரவு 10.30 மணி வரை இணை திடீர் சோதனை மேற்கொண்டேன். மேற்படி சோதனையின்போது அந்த அலுவலகத்தில் உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், திரு.க.முத்துப்பாண்டி மற்றும் 5 அலுவலர்கள் ஆஜரில் இருந்தார்கள். அந்த அலுவலகத்தில் இருந்த உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.முத்துப்பாண்டி என்பவரை சோதனை செய்தபோது அவரது பர்சில் ரூ.40/– பணம் இருந்தது. பணியாளர்களின் தொகை கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.60/– என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.60/–ல் இருந்து ரூ.20/– செலவு செய்துவிட்டதாகவும் மீதம் ரூ.40/– உள்ளதாகவும் தெரிவித்தார். அதனபடி அவரது பணம் ரூ.40/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு பின்புறம் இருந்த மஞ்சள் நிற பிளாஸ்டிக்கால் ஆன தபால் பாக்ஸில் 20 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.10,000/– இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க சரியான பதில் எதுவும் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.10,000/– மற்றும் பணம் வைக்கப்பட்டிருந்த மஞ்சள் நிற பிளாஸ்டிக்கால் ஆன தபால் பாக்ஸ் ஆகியவை கைப்பற்றப்பட்டது. அவர் அலுவலகம் வருவதற்கு பயன்படுத்தி வந்த, அந்த அலுவலகத்தின் முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த அவரது Hyundai Creta TN63 BH 0006 என்ற வாகனத்தை சோதனை செய்தபோது வாகனத்தில் உள்ளே வண்டியின் கியர் பாக்ஸ்–க்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 80 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.40,000/– இருந்தது. வண்டியில் இருந்த பணம் குறித்து உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.முத்துப்பாண்டி அவர்களிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே சரியான விளக்கம் கூறாத மேற்படி பணம் மொத்தம் ரூ.40,000/– அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அலுவலக வளாகத்தில் இருந்த Hyundai Creta TN63 BH 0006 வாகனத்தை ஓட்டுநர் திரு.கார்த்திகேயன், த/பெ.கௌரிசங்கர், 14, இளங்கோ தெரு, காமராஜர் சாலை, சிவகங்கை என்பவரை விசாரிக்க

அவர் மேற்படி வாகனம் தனது நண்பர் திரு.P.ரமேஸ், சிவகங்கை என்பவருக்கு சொந்தமானது என்றும், தான் நட்பு ரீதியாக உதவியாளர் திரு.க.முத்துப்பாண்டி அவர்களை தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு காரில் அழைத்து வந்து செல்வதாகவும் தெரிவித்தார். காருக்குள் மறைத்து வைக்கப்பட்டு இருந்த பணம் பற்றி அவரிடம் கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. அவரை சோதனையிட அவரது பர்சில் ரூ.5210/- இருந்தது. அந்த பணம் அவர் செலவுக்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. உதவியாளர் திரு.S.R.ஹிமலேஷ் பாபு, த/பெ.ரவி என்பவரை சோதனையிட அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூ.90/- இருந்தது. பணியாளர்களின் தொகை கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.120/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.120/- என்றும் அதில் ரூ.30/- செலவு செய்துவிட்டதாகவும் மீதம் ரூ.90/- உள்ளதாகவும் தெரிவித்தார். எனவே அவரது பணம் ரூ.90/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இளநிலை உதவியாளர் திரு.அ.ராம்குமார், த/பெ.அருணாசலம் என்பவரை சோதனையிட அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூ.110/- இருந்தது. பணியாளர்களின் தொகை கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.180/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.180/-ல் இருந்து மதிய சாப்பாட்டிற்கு ரூ.70/-ஐ செலவு செய்துவிட்டதாகவும் மீதம் ரூ.110/- உள்ளதாகவும் தெரிவித்தார். எனவே அவரது பணம் ரூ.110/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.சு.பழனிச்சாமி, த/பெ.சுப்பிரமணியன் என்பவரை சோதனையிட அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூ.130/- இருந்தது. பணியாளர்களின் தொகை கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.130/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அவரது பணம் ரூ.130/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தினுள் இருந்த Camera Operator திரு.மா.கணேசன், த/பெ.மாரிமுத்து என்பவரை விசாரிக்க, தான் ZIGMA TECHNOLOGIES INDIA (P) LIMITED சார்பாக ஒப்பந்த அடிப்படையில் தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூ.15/- இருந்தது. பணியாளர்களின் தொகை கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.50/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.50/-ல் இருந்து ரூ.35/-ஐ செலவு செய்துவிட்டதாகவும் மீதம் ரூ.15/- உள்ளதாகவும் தெரிவித்தார். எனவே அவரது பணம் ரூ.15/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தினுள் இருந்த Data Entry Operator திருமதி.செ.வடிவுக்கரசி, க/பெ.செல்வகுமார் என்பவரை சோதனையிடும் பொருட்டு தேவகோட்டை நகர் காவல் நிலைய W.Gr.I.PC 1202 திருமதி.R.நிமலா மற்றும் தேவகோட்டை, அனைத்து மகளிர் காவல் நிலைய W.Gr.I.PC 1626 திருமதி.R.பிரபா ஆகியோர் வரவழைக்கப்பட்டனர். பின்னர் Data Entry Operator

திருமதி.செ.வடிவுக்கரசி என்பவரை விசாரிக்க, தான் TATA Consulting Services சார்பாக ஒப்பந்த அடிப்படையில் தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேற்படி பெண்காவலர்களைக் கொண்டு அவரை சோதனையிட அவரது Grey color Hand Bag-ல் ரூ.160/— இருந்தது. பணியாளர்களின் தொகை கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.160/— என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அவரது பணம் ரூ.160/— அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார்பதிவாளர் அறைக்கு தெற்குப்புறம் உள்ள பதிவறையின் கிழக்கு பகுதியில் உள்ள மரபெஞ்சின் மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய ஆவணங்களின் பதிவு விபரங்கள் அடங்கிய கோப்பு எண்.548 என குறிப்பிடப்பட்டிருந்த பதிவேட்டினுள் 6 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள், 37 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 7 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.31,900/— இருந்தது. கோப்பு எண்.559 என குறிப்பிடப்பட்டிருந்த பதிவேட்டினுள் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.1000/— இருந்தது. கோப்பு எண்.593 என குறிப்பிடப்பட்டிருந்த பதிவேட்டினுள் 2 நூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.200/— இருந்தது. ஆக மொத்தம் ரூ.33,100/— இருந்தது. மேற்படி பணம் குறித்து உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.முத்துப்பாண்டி மற்றும் அலுவலர்களிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் கூறவில்லை. மேலும் உதவியாளர் திரு.க.முத்துப்பாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களும் மேற்படி பதிவறையை பயன்படுத்தி வருவதாகவும், அலுவலகத்தில் தற்போது ரொக்க பண பரிவர்த்தனை இல்லை எனவும், கட்டணங்கள் அனைத்தும் ATM/இணைய வழியில் பெறப்படுவதாகவும், மேற்படி பணம் அலுவலக பணம் இல்லை எனவும் தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.33,100/— கைப்பற்றப்பட்டது. மேலும், உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.முத்துப்பாண்டி தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று மேற்கொள்ளப்பட்ட ஆவண பதிவு பட்டியல், வில்லங்க சான்று மற்றும் நகல் தொடர்பான D கணக்கு பட்டியல், பிறப்பு இறப்பு கட்டணப்பட்டியல், ஆவண பதிவு தொடர்பான IP Camera/CD கணக்கு பட்டியல், உட்பிரிவு கட்டணம் தொடர்பான பட்டியல், முத்திரைத்தீர்வை (Section 41) தொடர்பான பட்டியல், திருமணப்பதிவு பட்டியல் தொடர்பான விபரங்களை கணிணியில் இருந்து பதிவிறக்கம் செய்து சமர்ப்பித்தார். அதன்படி 44 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது, 11 வில்லங்க சான்றிற்கான விண்ணப்பங்கள், 10 ஆவண நகல் கோரிய விண்ணப்பங்கள் இணைய வழியில் பெறப்பட்டுள்ளது. 8 பிறப்பு / இறப்பு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. 45 ஆவணங்களுக்கான CD கட்டணம் இணைய வழியில் பெறப்பட்டுள்ளது. 23 உட்பிரிவு தொடர்பான கட்டணங்கள் இணைய வழியில் வசூலிக்கப்பட்டுள்ளது. 20 ஆவணங்களுக்கான முத்திரை தீர்வை Section 41 பிரகாரம் இணைய வழியில் வசூலிக்கப்பட்டுள்ளது. 1 திருமணப்பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தின் 2020ம் வருட வருகைப்பதிவேடு, DEO மற்றும் IPC பணியாளர்களுக்கான வருகைப் பதிவேடு, பணியாளர்களின் தொகை கையிருப்பு பதிவேடு ஆகியவை விசாரணைக்காக

கைப்பற்றப்பட்டது. (1) உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.முத்துப்பாண்டி, (2) உதவியாளர் திரு.S.R.ஹிமலேஷ் பாபு, (3) இளநிலை உதவியாளர் திரு.அ.ராம்குமார், (4) அலுவலக உதவியாளர் திரு.சு.பழனிச்சாமி, (5) Camera Operator திரு.மா.கணேசன், (6) Data Entry Operator திருமதி.செ.வடிவுக்கரசி, (7) கார் ஓட்டுநர் திரு.கௌ.கார்த்திகேயன் ஆகியோரை விசாரித்து எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் இணைச்சோதனையில் மொத்தம் ரூ.83,100/– கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வு அறிக்கை குறிப்புகள் 04.11.2020ம் தேதி 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இணை திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், சரியாக கணக்கு சொல்ல இயலாத பணம் மொத்தம் ரூ.83,100/–, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், இணை திடீர் சோதனை சம்பந்தமான எனது நடவடிக்கை குறிப்பு ஆகியவற்றை இத்துடன் ஒப்படைக்கிறேன். இதுசம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd) செ.பாலகுரு 05/11/2020, துணை ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம். Submitted, Sir, Received this report along with enclosures and I registered a case in Sivagangai V&AC Cr.No.4/2020 for offence u/s 102 Cr.P.C and 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 05.11.2020 at 05.30 hrs. sd. I.Manimannan, DSP, V&AC, Sivagangai 05/11/2020.

The original F.I.R along with complaint enclosed with Joint Surprise Proceedings, Statements of 1) Tr.K.Muthupandi, 2) Tr.S.R.Himalesh Babu, 3) Tr.A.Ramkumar, 4) Tr.S.Palanisamy, 5) Tr.M.Ganesan, 6) Tmt.S.Vadivukkarasi, 7) Tr.K.Karthikeyan are submitted to the Hon'ble Special Judge, Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Sivagangai and the copies are submitted to the concerned officers.

8.11.20

DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.